


ஓலை 180| ஓசை 303| ஜூன் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## செய்குத்தம்பி புலவர்

‘சதாவதானி’ செய்குத்தம்பி புலவர்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற**

## பொருள்

**ஒரு செயலை வெற்றிகரமாக முடிக்கும் வலிமை என்பது மன உறுதியே; மற்றவை இரண்டாம் பட்சம்.**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## தூய தமிழில் பேசிடுவோம்!

பாவகை : எண்சீர் மண்டிலம்

தாய்த்தமிழ்போல் வேற்றுமொழி தமிழா உண்டோ?
தமிழிலில்லாத் தகுதிவேறு மொழியி லுண்டோ?
நாய்மொழியைக் கற்றெழுதிப் பேசு கின்றாய்;
நாயெனவே வேற்றுமொழி மலத்தை ஏற்றாய்;
பேய்ப்போலத் தமிழ்க்குருதி உறிந்து விட்டு
பிறமொழியின் காலையுமேன் நக்கு கின்றாய்?
ஆய்ந்துணர்ந்தே இனியேனும் கலப்பு மின்றி
அருந்தூய தமிழினிலே எழுதிப் பேசு!

ஆங்கிலமோ, சமக்கிருத இந்தி போன்ற
அகிலத்து மொழிக்கெல்லாம் தமிழே அன்னை;
ஏங்கியேதான் சொல்பஞ்ச மொழியு மேற்றாய்;
எம்தமிழில் இல்லாச்சொல் எஃதி லுண்டு?
தாங்கியேதான் சொல்லொன்றுக் கிரண்டு பத்துத்
தரமான சொல்லிருக்க மொழியாம் வேற்றை
ஈங்குநீயும் தமிழினிலே கலப்புச் செய்து
இழிவினமாய் இருந்துதமிழ் அழிக்க லாமா?

தாய்,துணைவி கலப்பானால் போற்றி ஏற்பாய்?
தமிழைமட்டும் ஏன்கலப்பால் குதறு கின்றாய்;
சேய்போல அடம்பிடித்து மொழிக்க லந்து
சிதைக்கின்றாய்; மானவெட்கம் ஏது மின்றி
சீழ்பிடித்தப் புண்ணாகப் புரையு மோடி
சிந்தையின்றி நாறுகின்றாய்; வெட்கம்! வெட்கம்!
மாய்வதற்குள் திருந்தியின்றே தூய்மை யான
மாத்தமிழில் பேசிடுவாய்! அன்றேல் மாய்வாய்!







நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

## பாவகை : கட்டளைக் கலித்துறை

நல்லதை எண்ணியே
நல்வினை ஆற்றல்
நலந்தருமே.
அல்லதைச் செய்திட
அல்லல் மிகுந்தே
அழிவுறுவர்.
இல்லார் உழைத்திட
இன்னல் விலக
இவர்ந்திடுவர்.
வல்லமை கொண்டே
வடித்திடும் நன்னெறி
வச்சிரமே.



கவிஞர் செ. கலைவாணி

# நதியின் அக்க(றை)ரையில்



நதியின் அக்கரையில்
யாருமில்லை.
வளைந்து,நெளிந்து
நாணப்படும்;
நதியின் அக்கரையில்
யாருமில்லை.
நதியின் மென்மையானஆவி
அலைந்து கொண்டிருக்கிறது
அக்கரைக்கும்,இக்கரைக்குமாய்;
நதியின் அக்கரையில்
யாருமில்லை.
ஒரு காலத்தில்
மணலில் பிரகாசஒளி இருந்தது.
அவ்வொளியில்
ஆயிரமாயிரம்
நிலவும் சூரியனும்
முகம் பார்க்க;
பச்சைப் புன்சிரிப்பில்
புத்தாடை அணிந்தது
இந்தபூலோகம்.
நதியின் அக்கரையில்
யாருமில்லை.
மடிப்பு வயிறு ஒட்டிய வயிறாய்
மாற நீயும் நானுமே
கடுஞ்சுமைக் காரணிகள்.
ஆலைக்கழிவும், சாயக்கழிவும்
நம் கழிவுமே அதில்
படுகையாய் கூறு போட்டுடோட
அமிர்தம் அள்ளித்தரும்;
"நதியின் அக்கறையில்"
நீயுமில்லை நானுமில்லை.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# மழலைகள் வரவால் மங்கலமாகும் மனைகளே

கனவுகளின் வங்கியில்
கதம்பமான வாரிசுகளே
நிலவின் வரவும்
நிலாக்கால விழாக்களே



மணம் வீசும் பூக்கள்
மனைகளிலே மங்களமாகவே
மழலையர் குழலில்
மதியும் கொடிகட்டிடுமே

தந்தனத்தானே பாடும்
தர்மதேவதையின் கற்பகவிருட்சங்களோ?
மனதிற்குத் தென்றலின்
மயிலிறகுத் தடவல்களாயோ?

ஆனைச் சவாரியில் இன்னும்
ஆனந்தமாய் மிளிருமே!
இன்பமும் இல்லாததுமோ
இவ்வுலகத் தேவதைகளோ?

எண்ணியே மகிழும்
எக்காள ஒலிகளோ?
மன்பதைக்குச் சித்தன்னங்களாலே
மங்களமாகும் மனைகளே.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# நெனவெல்லாம் நீயாக



நெஞ்சுக்குழி பூராவும்
அத்தமகன் நெனப்புதான்
சொப்பனத்தில் நீதானய்யா
சொக்கியே நிக்கிறேனே

தவிப்பில் நானிருக்க
மருகிடும் மனமுமே
தள்ளாடும் தாமரையாய்
நித்தமும் துடிக்கிறேனே

வந்திடு கண்ணாளா
வஞ்சியென்னைக் காணவே
ஒத்தையில நானிருக்கேன்
தேடித்தான் வந்தாலென்ன

ஆசைகள் தளும்புதய்யா
அள்ளிக்கிட வாருமய்யா
ஒன்னாச் சேந்துக்குவோம்
சந்தோசமா நாமிருப்போம்

கண்ணாலத்துக்குத் தேதி சொல்லு
கண்மணியை ஏந்திக்கொள்ளு
கட்டழகு மன்னவனே
மாலையிடும் நாளெதுவோ

கன்னியும் காத்திருக்கேன்
காணாமத்தான் தவிச்சிருக்கேன்
பரிசம் போட்டுத்தான்
பந்தக்காலு நட்டுமய்யா

தாலியக் கட்டிப்புட்டா
தாரமாக வாரேனே
சடுதியில சொல்லுமய்யா
சங்கடத்தைத் தீருமய்யா

நெனவெல்லாம் நீயாக
நித்தமும் கனவினிலே
நேரிலே வந்துதான்
நேசத்தைத் தாருமய்யா

**கவிஞர் ஜெ.பா. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்**

# புது பாதை தெரியுது

இடர்பாடுகளைத் தொலைக்க ஒரு வழி
இடர்பாடிலிருந்து உன்னைத் துண்டித்துப் பார்.
கடினம்தான்! கண்டிப்பாக
முயல; இயலுமது.
வாதனை வட்டத்திலிருந்து
விலகி வெளியே வர;
இன்னும் ஒரு கோணம் புரியும்.
சோதனைகளை சாதனைகளாக்கும் வழி தெரியும்.
தெளிந்து வரும் புது பாதையில்;
சள்ளையின்றி நடக்க,
முற்றிலும் தீர்ப்பாய் பிரச்சினைகளை.
இடையூறுகள் இடர்ப்பாடு கண்டோடிவிடும்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# அல்லல் நனைத்த நிலம்

அல்லவை இழைத்த அவுணர் திரள்
அல்லொலி எழுப்பும் ஆரல் முன்றில்
அல்லிக்கொடி அகம் அறுத்து வாட
அல்லல் நனைத்த நிலம்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# மீண்டும் எப்போ?

உன்னை மீண்டும் சந்திக்கின்றேன்,
உறவில் கலந்த உண்மைச் சிநேகிதனாய்!
மீண்டும் சந்திக்க நிமிடங்கள் காத்துக் கிடக்கின்றன!
காத்திருப்பேன், கள்ளமில்லா அன்புடன்!

நீயும் நானும் முதுமையில் நனைந்துவிட்டோம்!
ஆனாலும்,  நம் அன்பும் நட்பும் அப்படியே இருக்கிறது!
நான் படிக்கும்போது நீ எனக்காக வெளியில் இருந்து
காவல் செய்தது; இன்று நினைக்கும்போது,
கண்களில் கண்ணீர் மழை பெய்யும்!

ஒருதடவை காலம் பின்னோக்கிப் போகாதோ
என்று நினைக்கும் மனது!
என்னதான் இருந்தாலும், அந்தக் காலம் தந்த
உறவு இந்தக் காலம் தருமா?
நான் எல்லோரிடமும் சொல்வேன்,
அந்தக் கால உறவு வருமா என்று!

ஏனென்றால், இப்போது விநாடிக்கு விநாடி
வாழ்க்கை வழியில் மாற்றம்! எல்லாம் மாற்றம்!
நீயும் நானும் அன்று பேசிய வார்த்தைகள்,
நினைவுகள், எதிலும் மாற்றம் இல்லை!
அன்பின் தூய்மையில் அன்றுபோல் இன்றும் வாழ்கிறோம்!

மீண்டும் எப்போ? நினைவில் வரும் நீ நிஜத்தில்?



கவிஞர் திருமதி. ஜீவனிந்ரா கிங்ஸ்லி, கல்முனை, இலங்கை

# மலரே மலரே தெரியாதோ?



மிடுக்கான நடை,
கொஞ்சம் சிரிப்பு,
அழைக்கும் விழிச் சமிக்ஞை,
இதயம் திறக்கும் பார்வை,
இவை போதும் உங்களுக்குப்
காதல் வலையில் விழ!

தாயின் பரிதவிப்பு,
தந்தையின் அறிவுரை,
குருவின் போதனை,
அத்தனையும் மறந்து போகும்,
காதலென்னும் போதை மாத்திரையால்!

சுதந்திரமென்றும்
சமத்துவமென்றும்,
எதிலெல்லாம் பேசுவதெனத் தெரியாது,
இடறி விழுந்து,
வாழ்வைத் தொலைப்பீர்கள்,
உயர்திணை மலர்களே!

மதுகரம் பறந்திருக்கும்,
இன்னொரு மலர் தேடி!
அதே சிரிப்புடன்,
அதே மிடுக்குடன், அதே அழைப்புடன்,
மலரே நீ மட்டும்
மடைதிறந்த கண்ணீருடன்!

கவிஞர் சம்மாந்துறை மஷூறா, மருதமுனை

**1.**

சாக்கடையைச் சுத்தம்
செய்துவிட்டு வெளியில் வந்தான்,
உடம்பெல்லாம் அழுக்காக
எதிரில் வந்தவன்
விலகிப்போனான்,
உள்ளத்தில் அழுக்காக!



**2.**

நாம்தான் பூசையறையில்
நித்தமும் சாமிகளைத்
தேடிக்கொண்டு இருக்கிறோம்,
பெற்றோரை மறந்துவிட்டு!

**3.**

பழைய செருப்பு கிழிந்து
கால்களுக்கு ஒத்துழைக்கவில்லை என்று
புதிய செருப்பு வாங்கினால்,
அதுவும் கால்களைக் கடித்துக்
காயப்படுத்துகிறது.

**4.**

சலவை செய்யப்படாமல்
கவலையால் கறுத்துப்போய்,
சன்னலுக்குப் பின்னால்
சவமாய் சலனமற்றுத் கிடக்கிறது
முதிர்கன்னி என்னும்
முற்றிய நிலா!

**5.**

அர்ச்சகர் ஆலயத்தைத் திறக்கும் முன்பே
வெளியே வந்துவிட்ட கடவுள்,
வாசலில் நின்ற
குழந்தையைத் தேடி...

**6.**

தொட்டி மீன்களை
விடுதலை செய்யச்
சொல்லி அழுது அடம் பிடித்தன.
எங்கள் வீட்டுச்
செல்லக்குட்டி மீன்கள்!

**7.**

கண்ணகி மிச்சம் வைத்த
நெருப்பைத் தேடிக்
கொண்டிருக்கிறேன்.
சாதியை எரிக்க!

**8.**

பசி என்னைப் பந்தாடினாலும்,
நோய் என்னை நொறுக்கினாலும்,
மூப்பு என்னை முடக்கிப் போட்டாலும்,
இரவில் மனைவியை விட்டுப்
பிரிந்து புத்தனாக மாற மாட்டேன்!
அவன் அரசன்.
நானோ வறுமையிலும் சரி,
வளமையிலும் சரி,
கைப்பிடி அன்னம் எடுத்து அதில்
கடலளவு அன்பின் எண்ணம் சேர்த்து...
அன்பையும்
பண்பையும் சமமாகக்
கலந்து ஊட்டி,
முதுமைக்கு அஞ்சாமல்,
பிணிக்குப் பணியாமல்,
நோய்க்கு நோகாமல்,
பிரியாமல்
பிரபஞ்ச அன்பிற்குப்
கட்டியம் கூறும்
அன்றாடங்காய்ச்சி!

கவிஞர் முனைவர் அ. ச. மு. முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

வாழ்வில் கிடைப்பது சில அடிகள்
அவை மறக்க முடியா ஆழ்ந்த சுமைகள்
சித்திரம் வரைய ஓவியம் இல்லை
வாழ்க்கை எழுதப் பேனா இல்லை

தினமும் காண்பது இருமுகம்
அதில் மனிதனுடன் பேசுவது நிஜ உயிர்
தாளம் முழங்கக் கைகள் இருக்கும்
பாவம் மனதைத் தீண்ட வாய்கள் அதிகம்

கடலும் உயரும் பொய்மை உலகில்
நம்பிக்கை உடையும் ஒரு கணப்பொழுதில்
காகம் கரையும் என்பது நிஜமே
அதனால் மனிதனும் கதைப்பது வழக்கம் தான்

பார்க்க முடியா உலகைப் பேச இயலாது என்றே
பதினான்கு ஆண்டு கானகம் சென்றவன் அவன்
நினைப்பது நிலைக்க வேண்டும் சத்தியமே
உண்மையில் அவனின் நிலையில் நானுமே!

செல்ல நினைப்பது நிம்மதியில் கானகம் வேண்டியே!



கவிஞர் ஸபா நளீர், கண்டி (இலங்கை)

# உயிர் கொல்லி



மனிதன் உயிர்வாழ உண்ணும்
உணவில் கலப்படத்தின் கரங்கள்
வேர்களாய்

நோயின் வரவேற்பறையில்
கலப்படத்தின் காலடிச் சுவடுகள்
பாதயாத்திரையாய்

செங்கல் பொடியும் மரத்தூளும்
உணவுத் தொழிலின்
முதலாளிகளாய் இன்று

கலப்படத்தின் கழிவுகள்
சமையலறையில் உயிர் தின்னும்
உற்சாகங்களாய்

காற்று முதல் கருவறை
வரை கலப்படத்தின் நிழல்
வெளிச்சங்களாய்

விளைவு உலகத்தின் உயிரோட்டம்
இன்று உதிரப்போக்காய்
எதிர்காலம் ஏமாற்றமாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# மழையும் மனமும்



மழையோடு வருகின்ற
மண்வாசமும்
தீண்டிச் செல்லும்
தீந்தமிழ்த்தென்றலும்
தினமும் வாராதா
தித்திப்பைத் தாராதா

மழையே மழையே
மர்மத்தின் அழகே
தர்மத்தின் விளைவால்
தரணியில் பொழியும்
உலகின் உயிர்நீர்
உருவத்தில் துளியாய்
விழுவாய் நிலத்தில்
விவசாயி உள்ளத்தில்


வருமுன் வரவேற்கும்
வசந்த வானத்தில்
காற்றைப் போலே
காத்திருப்பேன் நானும்
முதல்துளி முகத்தில்
முத்தமிடும் முத்தே
மண்ணுக்கும் மனதிற்கும்
மாசில்லா சொத்தே

பூமியும் பூங்காற்றும்
பூக்களும் இலைகளும்
பறக்கும் யாவையும்
படரும் அனைத்தும்
மேடும் பள்ளமும்
காடும் கழனியும்
மலையும் கற்சிலையும்
மகிழ்ச்சியில் நனையும்
உன்னால் குளித்து
உயிரோவியம் பெறுமே

இரவில் தாலாட்டும்
பகலில் சீராட்டும்
பூப்பெய்திய பூவுக்குப்
பூப்புனித நீராட்டும்
காதலின் கவிதையைக்
கவிஞருக்கு நினைவூட்டும்
பருவங்கள் பிரித்து
பங்கீட்டு உணவூட்டும்
பசித்த எல்லோருக்கும்
பாலூட்டும் மழைநீராய்

கவிஞர் கோ. ஏழுமலை, நத்தாமூர்

# எரிமலை மனிதர்கள்



அமைதியாகக் காணப்படும் பூமி
இதில் சிற்சில இடங்களில்
பலவீனமான ஓட்டைகளுண்டு

பூமியின் உட்புறம் அதிகமான
வெப்பத்தைத் தன்னகத்தே அது
அடக்கி வைத்துக் காக்கிறது

உருக்கிய பாறைக்குழம்பான
மேக்மா கொதிநிலையில்
மிகுந்த அழுத்தத்தில் இருக்கும்

பூமிப்பந்தின் மேற்புற நிலம்
இவ்வழுத்தத்தில் நகர நகர
பாறைக்குழம்பு சீறி வெளிவரும்

பூமித்தாயின் பெருமூச்சோ இது
என அஞ்சி நடுங்க வைக்கும்
நெருப்பின் பிழம்பு மிரட்டிடும்

வானம் வரை செல்லும் புகை
இதன் சாம்பல் மண்ணுக்கு
நல்ல உரம் வளம் தரக்கூடியது

மனிதர்களில் பலர் இந்த ரகம்
சினத்தில் வெடித்துப் பின்னர்
தணிந்து அன்பைக் கொட்டுவர்

அடிக்கிற கைதான் அணைக்கும்
என்கிற பெரும் சமாதானத்தில்
வாழ்வு வளமாகும் நாளடைவில்

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

புகழுக்காக அலைபவர்கள்
சில புகழ் கிடைக்க
வேண்டும் என்பதற்காகவே
எத்தனையோ உறவுகளுக்குள்
உள்நுழைந்து தங்கள்
கைவரிசையைக் காட்டத்
துணிகிறார்கள்.
அங்கு நடப்பது ஒன்றுமில்லை
வெளியே இருந்து
அவமானப் பார்வை.
உள்ளே வெந்து
தான் மெது மெதுவாய்
செத்துக்கொண்டிருப்பது
இங்கு பெரிதாய்
ஒன்றுமே நடந்ததாய்
வரலாறு இல்லை.



கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# அம்மா (சுப்புலட்சுமி)

அகவை எண்பத்தைந்து வரைவையகம் தன்னில்
அன்னையவர் எம்மோடு வாழ்ந்து இருந்தார்;
அகிலமிதில் மதுரை உத்தங்குடியில் பிறந்து
அருணாச்சலம் என்ற மாமன்மகனை கைப்பிடித்து
அகிலமிதற்கே மூன்று பிள்ளைகளை ஈன்றளித்தார்!

உத்தங்குடியில் வாழ்ந்த உத்தமர்கள் இருவர்
உறவுகள் பேணி உழவினை செய்து
ஊரினில் காரைவீட்டுக் காரர்களென பெயர்பெற்றனர்;
பாரினில்கணவன் மனைவியாய் வாழ்வதெப்படியென அவர்கள்
பாங்குடன் வாழ்ந்தே காட்டினர் ; கர்ணம்
பாதம்பிரியான், நாகரத்தினமெனு மந்தவிணையரின் முதல்பெண்
பிள்ளையென பிறந்து ஆறுபூஷ்பங்கள் என்றழைக்கப்பட
தங்கையர் ஐவர் தம்பிகள் இருவருடன்
தரணியில் தனியாட்சி தன்னாட்சியென வாழ்ந்திருந்தார்!



பத்தாம் வகுப்பு முடிந்த வேளை
பந்தம் விட்டுப்போக கூடாதெனவெண் ணியதன்தந்தை
சொன்னதையேற்று சுப்புலட்சுமி தன்மாமன் மகனை,
சொக்கனை மீனாட்சி கரம்பிடித்த சித்திரை
திங்களில் கரம்பிடித்தாரவர் அவனியில் வந்துதித்த
திங்களோ சனவரியாகும்; அதிலும் முதல்நாளாகும்!
ஆதலினால் எமக்கிங்கு சனவரி யொன்றும்
அதனைத் தொடர்ந்து வந்திடும் ஏப்பரல்
பத்தொன்பதும் கொண்டாட்டம் மிகுந்த நாள்களே!

எந்தைபிறந்தது மாசிமாதம் திருவாதிரை நன்னாள்;
எந்தையைக் கரம்பிடிக்க வரம்பெற்று பிறந்த
என்னன்னை பிறந்ததோ அடுத்து வந்த
மார்கழி மிருகசீரிட நன்னாளிலிரு நட்சத்திரங்களும்
மிதுன ராசியில் அடங்குமதன் குறியீட்டைப்போல்
இருவரும் வாழ்ந்தனர் ஈர்புடன் என்றென்றும்;
இயற்கையடைந்தா ரன்னைபராபக ஆண்டுமீனாட்சி திருமணநாளில்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# வாழ்க்கை படகு

கோடை நீண்டு பெருகியதும்
விடுமுறையின் கோடுகள்
கூடுதல் வண்ணம் பெற்று
குழந்தைகளின் குதூகலத்தில் குடியேறிக்கொண்டது!

வரப்புகளுக்குள் வலம்வந்த
நண்டுகளாய் நகர்ந்தது என்னவோ
பெற்றோரின் மனம் மட்டும்தான்!

நீண்ட விடுமுறையின்
நீள அகலங்களை அம்மையப்பன் அளந்து முடிப்பதற்குள்
காலம் என்னும் பொழுது கடல் தாண்டிக்
கரையேறிக்கொண்டது!



எப்போதுமே
இரவல் நிழல் இறங்கிப் போவது
யாருக்கும் தெரியாது!

நம் வாழ்வென்னும் தோட்டத்தில்
நாம் பறித்ததும் பயன்பெற்றதும்
அனுபவம் என்னும் அரிச்சுவடி மட்டும்தான்!

இயற்கை வரையும் ஓவியத்தில்
இலையும் காயுமாய்
நாம் இணைந்து கொள்கிறோம்
அவ்வளவுதான் வாழ்க்கை என்பதை
இங்கு அநேகர் அறியுமுன்பே
வாழ்க்கை படகு வழிமாறிப்போகிறது!

வழக்கம் மாறாமல்
வந்து உதிக்கும் குட்டி நிலவும்
குழந்தைகள் உலகில் நீந்தி விளையாடி
நீண்ட இரவை எளிதாய் கடக்கையில்
தாழை மரம் சுமந்த பெற்றோர் மனம்
புதிதாய் திறக்கிறது!

பழைய பூமியில்
புதிய வானம் சிறகு விரிக்கையில்
பெற்றோரின் மனக்குகை திறந்து
குழந்தை மனம் கும்மாளமிட்டதும்
நீண்ட கோடைக் கானல்நீர் வடிவில் காட்சி தந்தது!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்



எத்தனை முறை
படித்தாலும்
சலிக்காத ஒரே
புத்தகம் நீ.

இன்னும் இன்னும்
எத்தனை பொக்கிஷம்
ஒளித்து வைத்திருக்கிறாய்
உன்னுள்.

தேடத் தேட
புதையல்கள்
திறக்கிறதே.

விரலோ? வீணையோ?
காற்றோடு
இசை மீட்டிக்கொண்டே
இருக்கிறாய்.

இடைவளைவில்
அடிக்கடி
சிக்கிக்கொள்கிறேன்
விபத்தில் நான்.

என்ன வித்தை கற்றானோ
பிரம்மன்
உன்னைப் படைக்க.

அசையும் விழியில்
நடனம் ஆடுகிறாய்,
இமையின் நுனியில்கூட
கவிதை பாடுகிறாய்.

போகும் வேளையில்
நீ வீசும் மௌனத்தில்
புயல் வீசுகிறது
என்னுள்ளே.

சேலைக் காட்டில்
தொலைந்து போகிறேன்,
துப்பட்டா வாசத்தில்
மிதக்கிறேன்.

உன்னை எழுதச் சொல்லி
என்னையும்
கம்பன் ஆக்கியது
என் பேனா.

பெண்ணே நீ
கம்பனின் காவியம்,
கல்லில் செதுக்கிய
ஓவியம்.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# கொசு புராணம்!



அந்திப் பொழுது சாய்ந்த உடன்
ஆரம்ப மாகிடுமே உந்தன் ஆட்டம்!
காதுகளின் அருகில் வந்து நீயும்
கத்திடும் ரீங்காரம் என்ன ராகம்?
அடிக்கும் தாளத்தில் அகப்படாமல் நீ
அங்குமிங்கும் பறந்து தப்பித்தும் விடுகின்றாய்!
எங்களின் தாளங்கள் தப்புத் தாளங்களோ?
வான்வழித் தாக்குதலில் வல்லவன் நீதானோ?
உடலின் குருதியை உறிஞ்சுகிறாய் நொடிப்பொழுதில்!
அலறினாலும் கதறினாலும் கடிக்கின்றாய் கருணையின்றி!
பலவகை வத்திகளும் புகைதரும் திரவங்களும்
நலத்தைக் கெடுப்பதனால் பாதிப்பு எங்களுக்கே!
வலைக்குள் பதுங்கினாலும் ஊடுருவல் செய்கின்றாய்!
அனைவரும் அஞ்சுகின்ற உயிரனமே நீதானே!
பிணிகள் பல உன்னாலே! பிறவாவரம் தன்னை
உனக்களிக்க வேண்டுமென வேண்டுகிறோம் இறைவனிடம்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# சாலை பாதுகாப்பு

சாலை விதிகளை சாதாரணமாய் நினைக்காமல்
விலையில்லா உயிரை விழுதாய்க் காப்போமே
நொடியில் ஏற்படும் நமது கவனமில்லா
வெடியாய் வெடிக்கும் விந்தை செய்தியே

கவனக் குறைவால் கண்ணிய உயிரும்
சுலபமாய் பறிபோகும் சுயநினை வின்றியே
போன உயிரும் திரும்பி வாராதே
தினமும் நடக்கும் திரளான விபத்தாலே




மஞ்சள் விளக்கும் மடக்கி நிறுத்தும்
சிவப்பு எரிந்தால் சிறிது ஓய்வாமே
பச்சை ஒளிர்ந்தால் பாங்காய் செல்லவே
அதுவரை காத்து அழகாய் நிற்கணுமே

அதிவேகம் கொடுக்கும் எச்சரிக்கை மணியாய்
குறைத்த வேகம் கொடுக்குமே நிம்மதி
இருபுறம் பார்த்து நின்று திரும்பணுமே
நமது உயிர்போல் மற்றோரை எண்ணணுமே

இளமையில் இழக்கும் இனிமை வாழ்வு
வளமையில் கிடைக்காதே கடந்த சுகமும்
வாகனங்கள் பெருகி வாழ்க்கையை குறைக்குதே
நகரத்துக்குப் பெயர்ந்து நரகமாய் போனதே

திடமான நம்பிக்கை திரண்ட மனதாய்
நலமாகக் கூடியே இன்னல் தவிர்ப்போமே
வாழும் நாட்களை வார்த்தையால் வெல்லாமல்
நட்புடன் சேர்ந்து நலம்வளம் பெறுவோமே

கவிஞர் பி. அன்புழகன், கடலூர்

# என் தேவதை!



சண்டையிடுவதும் நீதான்,
சமாதானப்படுத்துவதும் நீதான்
கண்ணீரைத் துடைக்கும்
கைகளும் நீதான்,
என் இரண்டாவது
தாயும் நீதான்,
எனக்குத் தோள் தரும்
தோழியும் நீதான்,
எனக்கு அறிவுரை
வழங்கும் ஆசானும் நீதான்,
என்னைப் புரிந்துகொள்ளும்
ஓர் உயிரும் நீதான்,
என்னை உற்சாகப்படுத்தும்
இன்னொரு தந்தையும்
நீதான்,
என் அன்புச் சகோதரியே!
சகோதரி இல்லாத வீடு
அரை வீடுதான்!



கவிஞர் காஜா முகைதீன் பாத்திமா நிம்ஸியா

காடுகளில் தீ பிடிக்கக்
காரணம் மூங்கில் மரங்கள்
ஒன்றோடு ஒன்று உரசியது
காரணம் இல்லை
என்றோ ஒரு நாள்
நீ அங்கு
நடந்து சென்றது தான் காரணம்



கவிஞர் இரா. மதிராஜ், காங்கேயம்

# வெப்பத்தின் ஊர்வலம்


சுட்டெரிக்கும் வெயில்
சுடரொளியில் சூரியன்.
பகலவனின் பார்வையால்
நிழலைத்தேடும் மக்கள்.

நாவரண்டு போகும்
நீர்குடிக்கத் தேறும்
வியர்வையாலே வறண்டு
வெயிலினாலே துவண்டு.

பாதத்திலே செருப்பு
புழுக்கத்தாலே வெருப்பு.
தலைக்குமேலே வெயில்
தாகத்துல தொண்டை.

நீர்கடுப்பு வந்தால்
நின்றுவிடும் சிறுநீர்.
நிழலினைத் தேடும்
நின்றாலே ஓய்வு.

குடையொன்று வேண்டும்
வெயிலில்தானே நடக்க
மடைதிறந்த வெள்ளம்
மாற்றத்திலே சூழல்.



அக்னிவெயில் வந்தால்
அலைவதைதான் தவிர்ப்போம்
வீட்டினிலே இருப்போம்
விதியென நினைப்போம்.

சாலையிலே மக்கள்
சரிந்துவிடும் கணக்கு.
ஆனமட்டும் பார்ப்போம்
கோடையினைத் தவிர்ப்போம்.

கவிஞர் முனைவர். இரவி சீனுவாசன், உடுமலைப்பேட்டை

# எளிமையின் வாழ்வில்தான் இனிமையும் கூடுமே!



எளிமை என்னும் ஒருமுறைதான்
வாழ்வியலை உயர்த்தும் நல்வாழ்வு தான்.

எளிமை என்றும் பரிசுதான்
அது வாழ்வில் என்றும் சிறப்புதான்.
என்னாலும் நம்மையே உயர்த்தும்
"இனிமை வாழ்வுதான்".

பற்றற்ற வாழ்வும் நேர்மை தூய்மை நிறைந்திட்ட
இனிய எளிய குணமும்தான்
நம் வாழ்வில் என்றும் மகிழ்வுதான்.

உண்ணும் உணவில்; உடுத்தும் உடையில்;
பேசும் சொல்லில்; பழகும் உறவில்;
எளிமை என்னும் ஒரு நிலை
நம்மை பக்குவப்படுத்தும் உயர்நிலை.

காலத்தால் செய்யும் சேவையும் உயர்ந்த பண்பும்
நேர்கொண்ட வாழ்வும் எளிய இனிய வாழ்வும்
என்றும் தரும் இனிமையே!

எளிமையின் வாழ்வில்தான் இன்பமும் கூடுமே
இறைவனும் விரும்பிடும் எளிமை என்னும் குணமே!

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

ஐந்தாம் தளம்
தினமும் வருகிறது பறவை
பழைய காடு



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# எனை மீட்டும் இசையே!



எனைத் தேடி வரும்
அவளின் பாதச்சுவடுகள்.
மெல்லிசை பாடுதே!

சிக்கித் தவிக்கும் என் மனம்
சிறைப்பட்டதே...
மீட்டாமலே இசை பாடுதே!

அவளின் கொலுசின்
ஓசையில்...
வெள்ளிச் சதங்கையணிந்த
வெண்பனி மலரே!

எனை மீட்டும் சங்கீதச்
சாரலோ உன் பாதக் கொலுசு?

கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# அந்திவானம்

தேகம் வருடிப் போகும்
குளிர் தென்றல்!
கூடடையும் பறவைகள்!
சில்வண்டின் ரீங்காரம்!
வானில் தவழ்ந்து வரும்
மேகக் கூட்டம்!
நிலவுக் காதலன்
உலா வரும் நேரமிது!
நானிலத்து நாரிகளின்
கன்னச் சிவப்பெடுத்து
அங்கம் எங்கும் பூசி
சிவந்ததோ அந்த
அந்திவானம்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை.119

**1.**
பொறாமை பெறாமை நன்றென்னும் ஒழுக்க நெறியைப்
பெற்றவனாக இருத்தலே சிறந்த பண்பு.

**2.**
பொறாமை கொள்ளாத குணத்தினை உடையவன்,
பெறுவதற்கு அரிய செல்வத்தை அடைவானே!

**3.**
பிறர் செல்வம் கண்டு மகிழாமல் அழுக்காறு அடைபவன்,
அறமும் செல்வமும் தனக்கென விரும்பாதவனே.

**4.**
தீச்செயலால் துன்பம் வருவதை அறிவர் அறிவுடையார்;
எச்செயலானாலும் அறமல்லாதவற்றைத் தெரிவு செய்யாரே!




**5.**
பகைவர் துன்பம் செய்யாவிடினும் கெடுவானே,
வகையாய் பொறாமையைத் தன்னுள் கொண்டோன்!

**6.**
தானம் தருவது கண்டு பொறாமை அடைபவன்,
தானும் கெடுவதுடன் சுற்றமும் இழக்கும் உடைமையை!

**7.**
அழுக்காறு உடையவனிடமிருந்து திருமகள் விலகுவாள்;
அவ்விடத்தில் மூதேவியே (வறுமையே) வந்து உலவுவாள்.

**8.**
மனதில் நுழைய விடாதீர் பொறாமை என்னும் பாவியை;
உன்னிடம் செல்வம் சேராமல் பூட்டி வைப்பான் சாவியை!

**9.**
நல்நெறியாளனின் வறுமையும் பொறாமைக்காரனின் வளமையும்,
எவ்வகையில் வந்ததென உலகை ஆராய வைத்திடுமே!

**10.**
பெருமை வந்து சேராதே பொறாமையாளனிடம்;
அருமையான செல்வம் தீராதே பொறாமை இல்லாதவரிடமே!

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# நிழல் திருடிய தீ

நம்பிக்கை விதைத்த நெஞ்சில்
நஞ்சை ஊற்றிய துரோகம்!
அன்பால் பிணைந்த உறவை
அறுத்துச் சென்றது ஏனோ?

உதிரம் கலந்த நட்பின்
உண்மைப் பரிசாம் கத்தி!
நிழலாய் தொடர்ந்த உறவில்
நெருப்பாய் புகுந்த வேதனை!



கூடிக் களித்த வேளையிலே
குழிபறிக்கத் துணிந்தாயே!
உதிரித் துளியாய் உன்னால்
உடைந்து போனது இதயம்!

மறைமுகத் தாக்குதல் தொடுத்து
மறைந்தே சிரிக்கும் கயமை!
நட்பின் முகவரி அழித்து
நயவஞ்சகம் செய்தாயே!

புன்னகை பூத்த உதட்டில்
பொய்க்கதை சொன்ன நாவே!
நீ விதைத்த இந்தத் துரோகம்
உன் வேரையே அறுக்கும் காலம் வரும்!

கவிஞர் அமானி முஹம்மது அலி, அக்கரைப்பற்று (இலங்கை)

எண்ணத்தில் இருந்து
விலகுவதல்ல,
விலகிச் செல்வதாக
எண்ணுவதுமல்ல!

எப்போதும்
ஆழ்மனத் தேடலோடு
பயணிப்பது;
எப்போதும் இதயத்தில்
ஆழப் பதிந்த கூர்வேலோடு
கொண்டாடுவது!

என்பது...
தானழிந்து போதலின்
திவ்விய நிலை!




கவிஞர் ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

ஆயிரம் நட்சத்திரங்கள்
அழகாய் மின்னுகின்றன
ஏழையின் ஓலைக்குடிசைக் கூரையில்



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹுவத்த கலேவெல



இடைவெளி இல்லாமல் கண்விழிகள்
அவள் நடைதேடி நாளும் அலையுதே!
நலமில்லா சிந்தனை நயத்தோடு
தினம் ஒரு எதிர்பார்ப்பு.

அவளின் சிறுபார்வை என் பெரும் புன்னகை!
புண்படாமல் தினம் புலன்விசாரணை.
புரிதல் இன்றி,
அக்கம்பக்கத்து ஆக்கம் என்னவோ.

என் மங்கையின் எண்ணம் எவ்வண்ணமோ?
தலைப்பின்றி அலைகிறது என் அறிவுக்கூடல்!
அன்றும் இன்றும்
காத்திருப்புப் பட்டியலில் தொடர்கிறேன்!

கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

**அவர்களின் வேலையாய்...**

கண்டுபிடிப்பது கஷ்டமே
என்றாலும் தவறு செய்யாமை!
அறியாது செய்த தவறுக்குச்
சுட்டிக்காட்டும் முன்பே
மன்னிப்புக் கேட்பதும்,
மீண்டும் நடக்கா
உறுதி எடுப்பதும்!
பின்தொடர்ச்சி
தேவைப்படா
செயல் முடித்தல்!
சொந்த கஷ்டத்தின்
தாக்கத்தால்
சேவைக் குறைபாடு
காட்டாமை!
அதிகாரங்களை
கடமைக்கு மட்டுமே
பயன்படுத்துவது!
கொடுக்கின்ற மரியாதை
வகிக்கும் பதவிக்கே
என உணர்வது!
அவை எல்லாம்
மனசாட்சி,
மனப்பக்குவத்தின்
வேலை!

******************************

**அதற்கு முன்னரே**

புரிந்துகொள்ளா,
உண்மை இல்லா
விஷயங்களுக்கு...
தகாத வார்த்தைகளும்
உள்ளம் பாதிக்கும்,
உடல் சோர்வடையும்,
கண்ணீர் வரவழைக்கும்,
பதற்றம் ஏற்படுத்தும்!
சொற்கள் வீசப்படும்போது
'வாய் வந்தபடி பேசாதே!'
அதற்கு முன்னால்
மனம் முழுவதும்
வேகப்பட்டதால் வந்த
ஆவேச வார்த்தைகள்
அவை...



கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

# மண்ணும் மணக்குமடி

வயக்காட்டு வெள்ளாம
வெளஞ்சாத்தான் வாழ்க்கையடி
ஈரமண் வாசனதான்
எங்கவூரு மூச்சுவழி!

உச்சு வெயிலில
உல்லாசம் காணுவோமடி!
பச்சவயக்காத்து வந்து
தாலாட்டுப் பாடுமடி!

பச்சமொளகாத் துவையலோட
பழங்கஞ்சிச் சாதமடி!
இச்சையோட ருசிச்சாக்கா
இதயமும் இனிக்குமடி!



ஏரோட்டும் சந்தோசத்தோட
எப்பவும் ஒழைப்போமடி!
வேரோட மரமாத்தான்
வேரூன்றி இருப்போமடி!

சேறை மிதிச்சாலும்
சோறுதரும் வயலுமடி!
குடிசையில இருந்தாலும்
கோடிசுகம் கெடைக்குமடி!

விறகடுப்புப் புகையோட
விசமில்லாத உணவுமடி!
வேசமில்லாத மனசுல
பாசத்துக்குப் பஞ்சமில்லடி!

நெஞ்சில ஈரமிருக்க
நெலமும் விளையுமடி!
நம்மூருபெரும
சொன்னா மண்ணும் மணக்குமடி!

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி, இலங்கை

# சதாவதானி செய்குத்தம்பி புலவர்

கட்டுரை

## முகவுரை



இசுலாமியத் தமிழ் அறிஞர்களுள் தலைசிறந்தவராக விளங்கியவர் செய்குத்தம்பி புலவர். மொழியியல் அறிவு, கவிபாடும் ஆற்றல், நினைவாற்றல் ஆகியவற்றில் சிறந்து விளங்கி, சீறாப்புராணத்திற்கு உரை எழுதிய பெருமைக்குரியவர். தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ் வளர்ச்சிக்காகவே அர்ப்பணித்த மாமேதை அவர்.

## இளமை மற்றும் கல்வி

செய்குத்தம்பி புலவர் 1874 ஆம் ஆண்டு ஜூலை 3 அன்று கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் கிராமத்தில் பக்கீர் மீரான் - ஆமினா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார்.

இவர் முறைப்படி பள்ளிக்கூடம் சென்று கல்வி கற்கவில்லை என்றாலும், தனக்குள்ளே இருந்த இயல்பான தமிழறிவாலும், விடாமுயற்சியாலும் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் இவருக்கு கைவந்த கலையாக இருந்தது. தனது 15-ஆவது வயதிலேயே செய்யுள் இயற்றும் அளவுக்குத் திறமை பெற்றிருந்தார்.

## சதாவதானக் கலைத்திறன்

செய்குத்தம்பி புலவரின் வாழ்வில் மிக முக்கியமான மைல்கல் அவரது சதாவதான திறமையாகும். ’அவதானம்’ என்பது ஒரே நேரத்தில் பல செயல்களைக் கவனித்து, நினைவில் கொண்டு விடையளிக்கும் ஒரு அரிய கலை.


திரு அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

### சதாவதானம் என்றால் என்ன?

'சதம்' என்றால் நூறு. ஒரே நேரத்தில் நூறு பேர் கேட்கும் வெவ்வேறு கேள்விகளுக்கு, மிகத் துல்லியமாக நினைவாற்றலுடன் விடையளிப்பதே சதாவதானம் ஆகும்.

1907 ஆம் ஆண்டு மார்ச் 10 அன்று சென்னை விக்டோரியா பொது அரங்கத்தில், அறிஞர்கள் பலர் முன்னிலையில் செய்குத்தம்பி புலவர் இந்த சதாவதான நிகழ்ச்சியைச் செய்து காட்டினார்.



ஒரே நேரத்தில் கணக்குப்போடுதல், கவிதை பாடுதல், விடுகதைகளுக்கு விடையளித்தல், மலர்களை எண்ணுதல் என நூறு செயல்களைச் மிக நேர்த்தியாகச் செய்து முடித்தார்.


இவருடைய இந்த அசாத்திய திறமையைப் பாராட்டி, அன்றைய தமிழறிஞர்கள் இவருக்கு 'சதாவதானி' என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர்.

### இலக்கியப் பணிகள்

செய்குத்தம்பி புலவர் சிறந்த சொற்பொழிவாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தார். இசுலாமிய இலக்கிய வரலாற்றில் மிக முக்கிய நூலான சீறாப்புராணத்திற்கு மிக விரிவான, தெளிவான உரையை எழுதினார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

**அவரது முக்கிய படைப்புகள்:**




- சீறாப்புராண உரை
- கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ்
- அழகப்பக் கோவை
- இன்னிசைப் பாமாலை
- நபிகள் நாயக மான்மியத் திருப்பாடல்

இவரது பாடல்களும் உரைகளும் தமிழின் சுவையையும், சமத்துவக் கருத்துகளையும் உலகிற்கு எடுத்துரைத்தன.

**தேசப்பற்று மற்றும் சமத்துவ நோக்கு**

மகாத்மா காந்தியின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட செய்குத்தம்பி புலவர், விடுதலைப் போராட்டத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். மேடைகளில் விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் உரையாற்றினார். மதம் கடந்து தமிழ் மொழியால் அனைவரையும் ஒருங்கிணைக்க முடியும் என்று நம்பியவர் அவர். திருக்குறள், கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களிலும் ஆழமான புலமை பெற்று, மத நல்லிணக்கத்திற்குச் சான்றாக வாழ்ந்தார்.

**முடிவுரை**

தன் அசாத்திய நினைவாற்றலாலும் தமிழ்ப் பற்றினாலும் ஒட்டுமொத்த தமிழகத்தையும் வியக்க வைத்த சதாவதானி செய்குத்தம்பி புலவர் 1950 பிப்ரவரி 13 அன்று இயற்கை எய்தினார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

## மன ஆற்றலே

## மிகப்பெரிய

## திறன்!

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :

9597887847
8870884969




# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com